**தலைப்பு 331 - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூலை 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய இலக்கம் 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட இந்நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆயுர்வேத திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இணங்கியுள்ளது.

(ஆ) அறிக்கையில் இலக்கம் 1.6.1(ஆ), 16.2(அ)(இ), 1.6.8, 1.6.9, 1.6.10(அ), 1.6.10(இ)(iv), 1.6.10(ஈ) மற்றும் 1.6.12(ஈ) போன்ற பந்திகள் சம்பந்தமாக கடந்த வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த அவதானிப்புக்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிசெயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகள் ரூபா 121,281,523 கூடுதலாகக் காட்டப்பட்டிருந்ததுடன் முற்பண குறுக்குப் பதிவுக் கொடுப்பனவுகள் ரூபா 41,149,751 உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சீராக்கல்கள் சரியாக கண்டுபிடிக்கப்பட்டு திறைசேரிப் புத்தகங்களில் சீராக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. | கட்டுநிதி மீதிக்கு கணக்கு சீராக்கப்படும் போது மற்றும் முற்பண “பீ” கணக்குக் கொடுக்கல் வாங்கல் சீராக்கப்படும் போது ஏனைய பெறுவனவுகள் கூடுதலாகச் சீராக்கப்பட்டமை மற்றும் குறுக்குப் பதிவுகள் செலவுகள் சீராக்கப்பட்டிராமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சமுர்த்தி வங்கியினால் மீதப்படுத்தப்பட்ட மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டிருந்த ரூபா 2,139,044 ஆனது பேரேட்டிற்கு கூடுதல் கட்டணமாக இன்றி அரசின் வருமானத்திற்கு செலவு வைத்தமை காரணமாக அரசின் நிவாரணச் செலவு அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. அது மீண்டும் பெறப்பட்ட மீதி நிவாரணத் தொகைக்கு உரிய இரண்டு நிதியங்களுக்கு மற்றும் கட்டாயச் சேமிப்புக்களுக்கு அதிகமாக செலவு வைத்து பங்களிப்புத் தொகை மீண்டும் பெறப்பட்டு ஒன்றிணைந்த நிதியத்திற்குச் செலவு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாதாந்த உண்மையான நிவாரணச் செலவு சரியாகக் கணக்கிடப்பட்டு தேவையான சீராக்கம் செய்யப்பட வேண்டியமை. | உச்சபட்ச அறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படுகின்ற நிவாரணங்களில் ஏற்படும் வேறுபாடு சீராக்கத்திற்காக சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டதுடன் மற்றும் நிதியங்களுக்கு கட்டாயச் சேமிப்புக்களுக்கு மேலதிகமாக செலவு செய்து பங்களிப்புத் தொகை மீண்டும் பெறப்படுவதற்கான செயன்முறை ஒன்று தயாரிக்கப்படும். |

### 1.6.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 யூன் 30 ஆம் திகதியில் பொருட் கணக்கெடுப்பு நடவடிக்கை நிறைவு பெறாமையினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 989,122,878 ஆகக் காட்டப்பட்ட நிதிசாரா சொத்துக்களின் பௌதீக நிலைமையினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொருட் கணக்கெடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு சொத்துக்களின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டியமை. | கொவிட் - 19 அச்சுறுத்தல் காரணமாக அஞ்சல் மூலமான அறிக்கைகள் பெறுவதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தமை. |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கையேற்கப்பட்ட ரூபா 1,577,406 பெறுமதியான மூலதனச் சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | கொள்வனவுகள் அவ் வருடத்திற்குள் திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டுக் கணக்குகளில் உள்ளடக்கப்பட வேண்டியமை. | 2019 ஆம் வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட அச் சொத்துக்கள் சீராக்கப்படுவது 2020 ஆம் ஆண்டில் ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1996 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள் கையேற்கப்பட்ட 10 காணிகள் மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது ரூபா 36,000 ஆன பெறுமதியிலிருந்து ரூபா 6,855,326 இற்கிடையிலான வீச்சில் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் எடுக்கப்பட வேண்டியமை. | 05 காணிகள் கையேற்பதற்கும் மற்றும் 2 காணிகளை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் மற்றும் 02 காணிகள் கையேற்கப்படாமலும் இருத்தல். |

## 1.6.3 கட்டுநிதி சீராக்கல் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருட இறுதியில் காசேட்டின் படி திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய மற்றும் திறைசேரியினால் பெறப்பட வேண்டிய மதிப்பீடு அவதானிப்பின் படி கட்டுநிதி சீராக்கல் கணக்கு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பிரகாரம் கட்டுநிதி சீராக்கல் கணக்கொன்று தயாரிக்கப்பட வேண்டியமை. | கட்டுநிதி இணக்கக்கூற்று சரியாகத் தயாரிக்கப்பட்டு வருட இறுதியில் கட்டுநிதி மீதி தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 208 இன் மூலம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களினால் செலவிடப்பட்ட ரூபா 1,675,405 ஆனது குறைத்து கட்டுநிதி இணக்கக் கூற்றுக்கு உள்ளடக்கப்பட்டிருந்தது. | கட்டுநிதி இணக்கக் கூற்றுக்கு சரியாக சீராக்கப்பட வேண்டியமை. | நிதிப்பிரமாணம் 208 இன் கீழ் உண்டான செலவினமாக குறிக்கப்படாமையே இவ் வழுவிற்கான காரணமாகும். |

**1.6.4 காசுப்பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கட்டுநிதி மீதி ரூபா 1,295,857 ஆன தொகை வெளிப்பாய்ச்சலாகவும், பணத்தின் தேறிய வேறுபாடு இல்லாமல் அது ரூபா 5,296,356,178 ஆகவும் மற்றும் முற்பணக் குறுக்குப் பதிவுகள் ரூபா 41,149,751 ஆன தொகை பண வெளிப்பாய்ச்சலாகவும் காட்டப்பட்டிருந்த காரணத்தால் காசுப்பாய்ச்சல் கூற்று சரியானதென உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. | பண உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் சரியாக காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டியமை. | கண்டுபிடிக்கப்பட்ட புதிய படிவத்தை உபயோகிக்காமையின் காரணத்தால் காசுப்பாய்ச்சல் கூற்றில் தவறுகள் ஏற்பட்டமை. |

**1.6.5 வைப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பயிற்சி நிலையத்தை நடாத்துவதற்காக வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு பெறப்படாது உழைக்கப்பட்ட வருமானத்தில் செலவுகள் உள்ளடக்கப்பட்டதன் பின்னர் ரூபா 5,397,212 பொது வைப்புக் கணக்கில் தக்க வைத்தமையுடன் ரூபா 3,084,699 மட்டுமே அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டது. | 2015 யூன் 24 ஆந் திகதிய 243/2013 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | பயிற்சி நிலையம் நடாத்துவதற்காக வருமானத்தின் 20 சதவீதத்தை தக்க வைப்பதற்குத் திணைக்களத்தின் நிதி நிர்வாக அதிகாரமளித்தலின் பிரகாரம் அதிகாரம் பெறப்படாமை. |
| (ஆ) நாளாவித நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாவட்ட மற்றும் பிரதேசக் காரியாலயங்களுக்கு மைக்ரோ நிதி வங்கிப் பிரிவில் பெறப்பட்ட பணத்தில் மீண்டும் அனுப்பப்பட்ட ரூபா 2,199,126 ஆனது அப்பிரிவிற்கு தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் தக்க வைக்கப்பட்டிருந்தது. | பிரிவுகளுக்குத் தீர்க்கப்பட வேண்டிய பணம் பொது வைப்புக் கணக்கில் தக்க வைக்கப்படாமை. | வைப்புக்கள் வேறுபடுத்தி கண்டறியப்படாமை காரணமாக ஏற்பட்ட இத்தவறு 2020 இறுதியின் போது தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (இ) சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவிற்காக வங்கி நிதிப் பிரிவில் பெறப்பட்ட ரூபா 3,457.3 மில்லியனில் மேலும் தீர்க்கப்படுவதற்கு ரூபா 2,374.5 மில்லியன் தொகை பொறுப்பாக இருந்த போதிலும், பொது வைப்புக் கணக்கின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவும் மற்றும் கணக்குகளில் சரியாகக் காட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | திறைசேரியினால் பணம் பெறப்படாத காரணத்தால் தீர்க்கப்படுவதற்கு முடியாமையால் இப்பொறுப்புக்கள் வைப்புக் கணக்கில் காட்டப்படுகின்ற போது தேறிய சொத்துக்களுக்குத் தாக்கமளித்திருந்தமை. |
| (ஈ) விளம்பர் நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் திறைசேரியின் அனுமதி பெறப்படாது பொது வைப்புக் கணக்கு உபயோகிப்பதற்கு ஏற்பட்ட சமயத்தில் மீளாய்வாண்டின் இறுதியின் போது ரூபா 17,360,531 ஆன மீதி காணப்பட்டது. | திறைசேரியின் அனுமதி பெறப்பட வேண்டியமை. | விளம்பர நிதியத்திற்குரித்தான வைப்பு மீதிகள் வருட இறுதியில் தீர்க்கப்பட்டிராமை. |
| (உ) 2019 திசெம்பர் 31 திகதியில் காசேட்டின் நிலுவை ரூபா 84,296,720 ஆன நட்டஈடு மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவிற்காக பொது வைப்புக் கணக்கில் மாற்றப்பட்டிருந்ததுடன் 2020 யூன் மாதம் வரையில் அதில் எவ்வித கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கட்டுநிதி பொது வைப்புக் கணக்கில் தக்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருக்க வேண்டியமை. | பணிக்கொடைப் பொறுப்புக்களின் ஒரு பகுதி தீர்க்கப்படுவதற்காக எழுதப்பட்ட காசோலை வங்கிக்குப் பணம் விடுவிக்கும் நோக்கத்தில் மறுக்கப்பட்டு வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமை. |

### 1.6.6 முற்பணக் கணக்கு மிகுதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்துடன் கடன் பதிவேட்டின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய கடன் மிகுதி ரூபா 58,021,484 என்பதுடன் ரூபா 8,990,000 ஆக கடன் திறைசேரிக்கு அறிக்கையிடப்படாமையினால் இணக்கக் கூற்றுக்கு திறைசேரிப் புத்தகத்தின் பிரகாரம் காட்டப்படுகின்ற கடன் மிகுதியாக ரூபா 49,031,484 உள்ளடக்கப்பட்டிருந்தது. | சகல சீராக்கங்கள் திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டு முற்பணக் கணக்கில் சரியான நிலைமை வெளிக்காட்டப்பட வேண்டியமை. | மாவட்டத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 8,990,000 ஆன விழா முற்பணம் செலவு அறிக்கையிடப்படாத தவறை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.7 எல்லை மீறுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பெறுவனவுகளில் குறைந்த பட்ச எல்லை ரூபா 275,000,000 என்பதுடன் உண்மையான பெறுவனவுகள் ரூபா 271,047,936 என்பதால் ரூபா 3,952,064 ஆல் அனுமதிக்கப்பட்ட குறைந்தபட்ச பெறுவனவுகள் எல்லைக்கு பெறப்படவில்லை. மேலும், உச்ச செலவு எல்லை மற்றும் உச்ச வரவு மீதி எல்லைகள் முறையே ரூபா 325,000,000 மற்றும் ரூபா 325,000,000 என்பதுடன் அதன் உண்மையான மதிப்பீடுகள் முறையே ரூபா 252,277,349 மற்றும் ரூபா 58,021,484 ஆகும். திறைசேரியின் அனுமதியின்றி பேணப்படுகின்ற ஊழியர் கடன் சுழலும் நிதியத்தில் மீளாய்வாண்டில் 182 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 37,939,566 ஆன கடன் வழங்கப்பட்டமை இந்நிலைமைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. | எல்லைகளை மீள் திருத்தம் செய்து கணக்குகளில் உள்ளடக்கப்பட வேண்டியமை மற்றும் ஊழியர் கடன் சுழலும் நிதியம் பேணப்பட்டு விடுதலானது திறைசேரியின் அறிவுறுத்தலின் அடிப்படையில் செயற்படுத்தப்பட வேண்டியமை. | கணக்காய்வு ஐய வினாவுக்கு விடை அளிக்கப்படவில்லை. |

### 1.6.8 பதிவேடுகள், மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) நிலையான சொத்துக்கள் பதிவேடு** | | |
| 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை / நிதிப்பிரமாணம் 502(2) இன் II ஆவது பிற்சேர்க்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நாளதுவரையாக்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | **வாகனங்கள் பட்டியல் பதிவேடு** | | |
| | நிதிப்பிரமாணம் 1647(உ) பிரகாரம் வாகனப் பட்டியல் பதிவேடு பேணப்படவில்லை. | பிரமாணத்தின் பிரகாரம் வாகனப் பட்டியல் பதிவேடு பேணப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| **(இ)** | **சேதங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| | நிதிப்பிரமாணம் 110 மற்றும் 104(i) இன் பிரகாரம் இழப்புக்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்படவில்லை | இழப்புக்கள் தொடர்பான பரிசோதனைகள் நடாத்தப்பட்டு பதிவேடு நாளதுவரையாக்கப் பட வேண்டியமை. | பின்னர் விடை அளிக்கப்படும். |

**1.6.9 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக சான்றுப்படுத்த வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தினால் நிதி கட்டுப்பாட்டிற்காக விளைதிறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் விளைதிறன் தொடர்பாக ஏற்கனவே மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையினை விளைதிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அம் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை | | |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவைப்பட்டவாறு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்குதல் இடம் பெறுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுபடுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.8 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வு ஐய வினாக்களுக்காக கால தாமதமின்றி பதில் வழங்கும் உள்ளக வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.6.10 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும (சமுர்த்தி) அதிகாரச் சட்டம் | | | |
| (i) | 5 (ஊ) பிரிவு | திவிநெகும சமூக அடிப்படையிலான அமைப்புக்கள், திவிநெகும பிராந்திய அமைப்புக்கள், | கணக்காய்வு செய்வதற்கு முடியுமான வகையில் நிதி ஏற்பாடு | அரசினால் கொள்கைத் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டதன் பின்னர் அரச கணக்குகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திவிநெகும மாவட்ட குழு, திவிநெகும சமூக அடிப்படையிலான வங்கி, திவிநெகும சமூக அடிப்படையிலான வங்கிச் சங்கம் என்பவற்றை கணக்காய்வு செய்வதற்கு ஒதுக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | உள்ளடக்கப்பட வேண்டியமை. | குழுவினால் தீர்மானம் எடுக்கப்பட்டால் மட்டுமே அதிகாரச்சட்டம் திருத்தப்பட முடியும். |
| (ii) | 36 மற்றும் 37 ஆம் பிரிவுகள் | திவிநெகும (சமுர்த்தி) அபிவிருத்தி நிதியம் மற்றும் திவிநெகும (சமுர்த்தி) சுழற்சி நிதியம் தோற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் உரிய நிதியத்தை தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திறைசேரியிடம் கோரப்பட்ட அறிவுறுத்தலின் படி விரைவில் இரு நிதியங்களையும் தோற்றுவிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 10 ஆவது பந்தி மற்றும் 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | முன்னாளர் பணிப்பாளர் நாயகத்தின் உள்வருதல் மற்றும் வெளியேறல் நேரங்கள் விரல் அச்சு இயந்திரத்தினால் அல்லது பதிவேட்டில் குறிப்பிடப்படாமல் மீளாய்வாண்டின் போது 39 நாட்களுக்கு விடுமுறை நாட்களுக்கான கடமைப்படிகளாக ரூபா 232,144 வழங்கப்பட்டிருந்தது. | தாபன விதிக் கோவையின் மற்றும் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் களுக்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | அமைச்சின் செயலாளரினால் அனுமதிக்கப் பட்டிருந்தமையினால் கொடுப்பனவு செய்யப்பட்டது. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

---------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 135 மற்றும் 381(i) | பயிற்சி நிலையங்களில் அனைத்துத் தொழிற்பாடுகளும் நிதிக் கட்டுப்பாட்டிற்கான அதிகாரமளிக்கப்பட்ட பகிர்ந்தளிப்புக்களிற்கு மாறாக இணைக்கப்பட்ட பதவியணியினரின் மூலம் மேற்கொள்ளப் படுகின்றன. மேலும், 3 பயிற்சி நிலையங்களில் திறைசேரியின் அனுமதி பெறப்படாது வங்கி நடைமுறைக் கணக்கு பேணப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | முன்னால் இது சம்பந்தமான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 138 | புதிய நிவாரண உரித்து சான்றிதழ் வழங்கப்படும் போது 3 பெறுகைகள் தொடர்பாக ரூபா 56,844,400 ஆன கொடுப்பனவுகள் செய்யப்பட்ட போது நிதிக் கட்டுப்பாடுகள் பகிர்ந்தளிக்கப்பட்ட உத்தியோகத்தரிற்குப் பதிலாக விடய எழுதுநரால் சான்றுப்படுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிதிக் கட்டுப்பாட்டு பகிர்ந்தளிப்பு எல்லைகளுக்கு இணங்கியதாகச் செயற்படுத்தப்பட வேண்டியமை. | சமுர்த்தி அதிகார சபையின் காலத்திலிருந்தே காணப்பட்ட விடய எழுதுநர் கையொப்பமிடுவதற்கான நடைமுறை தற்போது மாற்றப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 6 மாதங்களுக்கு அதிகமான சமர்ப்பிக்கப்படாத ரூபா 1,750,348 பெறுமதியான 13 காசோலைகள் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | விரைவில் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 1647(அ) மற்றும் 1994 இன் ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 26/92(I) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 140 வாகனங்கள் சம்பந்தமாக வாகனங்கள் தொர்பான கணிப்பீட்டைச் செய்வதற்கு, வாகனங்களில் திணைக்களத்தின் பெயர் மற்றும் அரச இலட்சினை என்பவற்றை அச்சிடுவதற்குமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | வாகனங்களின் பரிசோதனை நடவடிக்கை செய்யப்பட்டு முடிப்பதற்கும் அனைத்து வாகனங்களுக்கும் அரச இலட்சினை பொறிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | திணைக்களத்தினுள் பேணப்பட்டு வரும் சமூகப் பாதுகாப்பு பொறுப்பு நிதியம், வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியம், வங்கி சங்கங்கள், எழுதுகருவிகள் சுழற்சி நிதியம், ஊழியர் கடன் என்பவற்றை நடாத்திச் செல்வதற்குத் தேவையானவற்றை கருத்திற்கொண்டு அவற்றை சட்டரீதியாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | சட்டத்தின் 45 ஆம் பிரிவின் பிரகாரம் இந்நிதியங்கள் சட்டரீதியான நிதியங்களாக ஏற்றுக் கொள்ளப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2015 இன் யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | காரியம் முடிவடைந்தவுடன் வழங்கப்பட்ட இடைக்காலக் கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டுமாயினும், ஆனால் 31 அலுவலகங்களுக்கு 59 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 817,734 ஆன முற்பணம் தீர்க்கப்படுவதற்கு 7 நாட்கள் தொடக்கம் 9 மாதங்கள் வரையான காலவீச்சில் எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | இடைக்காலக் கட்டுநிதி தீர்க்கப்படுவதை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.6.11 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புதிய சமுர்த்தி நிவாரணம் பங்கிடப்பட்ட விழாவின் போது பொருட்களுக்காக கொடுக்கப்பட்ட வட் வரி ரூபா 16,105,597 தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பிரதியுடன் தேசிய இறைவரி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், அதில் ரூபா 8,437,500 ஆன வட் வரி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ஒரு விநியோகத்தர் செயலற்ற வரி செலுத்துநர் ஆவார். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | தேசிய இறைவரி ஆணையாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் அடிப்படையில் குறிப்பிட்ட கோவை தேசிய இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டதன் பிரகாரம் கோரப்பட வேண்டிய கட்டுநிதி ரூபா 67,312,955,000 ஆகும். ஆயினும், திட்டம் மீள் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்காது அதை விட ரூபா 3,289,485,000 குறைவாக ரூபா 64,023,470,000 கட்டுநிதி கோரப்பட்டிருந்ததுடன் பெறப்பட்ட கட்டுநிதி ரூபா 6,038,030,000 மட்டுமே ஆகும். | கட்டுநிதி திட்டமிடப்பட்டு கோரப்பட வேண்டியமை. | கட்டுநிதி திட்டமிடல் 2 கட்டங்களில் செய்யப்பட்டமை, மூலதனச் செலவு 25 சதவீதத்தினால் அநாதைகள் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்யும் ஊழியரின் எண்ணிக்கையினை அதிகரிப்பு போன்ற காரணங்களினால் திட்டமிடப்பட்ட கட்டுநிதி கோரப்படுவதற்கு முடியாமை ஏற்பட்டது. |
| (ஆ) | தலைமைக் காரியாலய உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு நேரடியாகக் கையளிக்கப்பட்ட ரூபா 7,310,779 ஆன பணம் புத்தகத்திற்கு சீராக்கப்படுவதற்கான நடவடிக்கையின்றி ரூபா 5,972,767 ஆனது வங்கி இணக்கக் கூற்றிற்கு மற்றும் ரூபா 1,338,012 ஆனது பொது வைப்புக் கணக்கிற்கு சீராக்கப்பட்டிருந்தது. மேலும், வங்கியில் பணமாக்கப்பட்ட ரூபா 2,402,752 ஆன 03 காசோலைகள் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளாக வங்கி இணக்கக்கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட காரணங்களினால் திறைசேரிக்கு கட்டுநிதி தீர்க்கப்படுதலானது சரியாக கணிப்பிட்டுக் கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | காசேடு மற்றும் வங்கி இணக்கக் கூற்று சரியாக்கப்பட்டு திறைசேரிக்கு கட்டுநிதி தீர்க்கப்படல் சரியாகச் செய்யப்பட வேண்டியமை. | முன்னால் இவ்வாறான தவறுகள் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மதிப்பீடு சரியாகத் தயாரிக்கப்படாமை காரணமாக மீண்டெழும் செலவின விடயத்திற்கு மாற்றப்பட்ட ரூபா 3,000,000 ஆன ஒதுக்கங்களில் ரூபா 1,085,353 அதாவது நூற்றுக்கு 36 வீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு சரியாகத் தயாரிக்கப்பட வேண்டியமை. | ஒதுக்கங்கள் மாற்றுவதற்காக அனுமதி பெறப்பட்ட போது மாவட்டக் காரியாலய கணக்குகள் தீர்க்கப்பட்டு முடிந்தமை, கட்டுநிதி போதியளவில் பெறப்படாமை போன்ற காரணங்களால் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டமை. |
| (ஆ) | மூலதனச் செலவு விடயம் ஒன்றுக்கு மற்றும் மீண்டெழும் செலவின விடயங்கள் 02 இற்கு ஒதுக்கப்பட்ட தேறிய ஒதுக்கம் முறையே ரூபா 500,000 மற்றும் ரூபா 300,000 முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தன. | - மேற்படி – | மதிப்பீட்டு ஒதுக்கங்கள் தயாரிக்கப்பட்டதன் பிரகாரம் செலவு செய்வதற்காக உத்தியோகத்தருக்குத் தேவையான அறிவுறுத்தல் வழங்கப்படும். |
| (இ) | மீண்டெழும் 07 செலவு விடயங்களில் ரூபா 13,300,000 ஆன தேறிய ஒதுக்கத்தில் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டுப் பின்னர் ரூபா 3,612,248 அதாவது நூற்றுக்கு 16 வீதத்திலிருந்து நூற்றுக்கு 82 வீதத்திற்கிடையிலான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தது. மேலும், 07 மூலதன செலவின விடயங்களில் ரூபா 20,400,000 ஆன தேறிய ஒதுக்கத்தில் ரூபா 17,027,352 அதாவது நூற்றுக்கு 26 இலிருந்து நூற்றுக்கு 73 வீதம் இடையேயான வீச்சில் சேமிப்பு அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | புதிய நிவாரணங்கள் வழங்கப்படுதல் மற்றும் ஆட்சேர்ப்புப் பகிர்ந்தளிப்பு போன்ற காரணங்களுக்கு முன்னுரிமை வழங்கியதன் அடிப்படையில் ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை செயற்படுத்துவதற்கு முடியாமை மற்றும் எதிர்காலத்தில் முறையாக நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.3 அரச உத்தியோகத்தரின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

கீழ்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் இடம்மாற்றலாகிச் சென்ற, மரணித்த, ஓய்வூதியம் பெற்ற, வேலையிலிருந்து விலகிய 204 உத்தியோகத்தர்களின் 3 மாதத்திலிருந்து 5 வருடங்களுக்கு அதிகமான காலவீச்சிலிருந்து அறவிட வேண்டிய நிலுவையாகவுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,976,559 ஆகும். | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 1 மற்றும் 3 ஆம் பந்திகளின் பிரகாரம் மற்றும் தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உடன்பட வேண்டியமை. | உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகள் சம்பந்தமான செயற்பாடுகள் முடிக்கப்படாமை மற்றும் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தரின் ஒழுக்காற்று நடவடிக்கை முடிவுறாமையினால் இவ் அறவீடுகளை முடிப்பதற்கு இயலாமை காணப்பட்டது. |
| (ஆ) | அறவிடப்பட வேண்டிய கடன் ரூபா 563,454 கணக்குகளில் உள்ளடக்கப்படாமை மற்றும் மேலதிகமாக அறவிடப்பட்ட ரூபா 234,000 அறவிடப்பட வேண்டிய கடன் மீதிக்கு எதிரீடு செய்யப்பட்ட காரணத்தால் அந்த அளவினால் அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. மேலும், கூட்டுத்தொகை ரூபா 114,809 ஆன கடன் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உத்தியோகத்தர் களுக்காக கடன் வழங்கல், கடன் அறவிடல் மற்றும் அறவிட வேண்டிய மீதியைக் கணிப்பிடல் போன்றவை சரியாகச் செயற்படுத்தப்பட வேண்டியமை. | மேலதிகமாக அறவிடப்பட்ட கடன் மீதிக்குரிய உத்தியோகத்தருக்கு கொடுப்பனவு விரைவில் செய்யப்படும். ஏனைய அவதானிப்புக்கள் தொடர்பாக விடையளிக்கப்பட வில்லை. |

## 2.4 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 9 செலவு விடயங்களுக்கான ரூபா 3,810,944 ஆன சேமிப்பு ரூபா 82,357,424 ஆல் விஞ்சப்பட்டு ரூபா 86,168,368 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்கியதாக கடப்பாடுகளுக்கு உடன்பட வேண்டியமை. | 2018 ஆம் வருடத்தின் பொறுப்புக்கள் விடுவிக்கப்படுவதற்கு மேற்கொண்டமை மற்றும்புதிய நிவாரணப் பங்கீடு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக எதிர்பார்க்கப்பட்ட செலவுகள் அதிகரித்தமை அதற்கான காரணங்களாவதுடன் மற்றும் இந்நிலைமை ஏற்படாமலிருப்பதற்கு தேவையான அறிவுறுத்தல் வழங்கப்படும். |
| (ஆ) | 12 செலவு விடயங்களுக்குத் திறைசேரிப் பொறுப்புக்கள் கூற்றுக்கு மேலதிகமாக ரூபா 2,689,517,664 அதிகமாகவும் 20 செலவு விடயங்களுக்குத் திறைசேரி பொறுப்புக்கள் கூற்றை விட ரூபா 103,606,031 குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடத்திற்கான அனைத்துப் பொறுப்புக்கள் அடுத்த வருடத்திற்கு கொண்டு செல்லப்படாது அத்தொகை வருடத்திற் குள்ளேயே கொடுத்துத் தீர்க்கப்பட வேண்டியமை. | சிகாஸ் கணக்கீட்டு முறைமைக்கு ஒதுக்கங்களின் எல்லைக்குள் உடன்பட்ட பொறுப்புக்கள் மட்டுமே உள்ளடக்கப்பட முடியும் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்ட பின்னர் பெறுமதி வேறுபடுதல். |

### 2.5 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் வைப்பிலிடப்பட்ட ஆனால் வசூலிக்கப்படாத காசோலைகள் முறையே ரூபா 2,950,975 மற்றும் ரூபா 436,815 சரியாக இனங்காணப்படாது தொடர்ந்தும் வங்கி இணக்கக் கூற்றுக்கு உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | வங்கி இணக்கக் கூற்று சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | நிலுவை நிவாரணத் தொகை நேரடியாக அனுப்பப்பட்ட ரூபா 2,950,975 ஆன தொகை உள்ளடங்கிய தவறு சரி செய்யப்பட்டு 2016 மார்ச் மாதத்திலிருந்து திருத்தப்பட்ட வங்கி இணக்கக்கூற்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூர நோக்கும் செயற்பணியும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1995 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வறுமையை ஒழித்து சமூகத்தை வலுப்படுத்தக் கூடிய வகையில் உறுதியான வரையறைகள் உள்ளடக்கி தேசிய கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நிகழ்ச்சித்திட்டம் செயற்பாடு மற்றும் சமூகத்துடன் தகவல்களை பரிமாற்றல் போன்றவற்றுக்காக தகவல் தொழில்நுட்ப முறைமையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை, சமுர்த்தி சமூக வங்கி இலாபம் உழைப்பதனை நோக்கமாகக் கொண்டு செயற்படுத்தல் போன்ற காரணங்களால் சமூகத்தை | வறுமையை ஒழித்து சமூகத்தை வலுப்படுத்தக் கூடிய உறுதியான வரையறைகளை இனங்கண்டு தேசிய கொள்கை ஒன்றை தயாரிக்க வேண்டியமை. | சமுர்த்தி நலன் பெறுநர்களை வலுப்படுத்தும் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக சமுர்த்தி வங்கி முறைமையை ஆரம்பித்து வைப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களும் மற்றும் கடன் நிகழ்ச்சித் திட்டங்களும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. |

வலுப்படுத்துவதற்கான எவ்வித செயற்பாடுகளும் செயற்படுத்தப்பட்டதாக அவதானிக்கப்படவில்லை.

### 3.2 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு வாழ்வாதார அபிவிருத்தி செலவு விடயத்தின் கீழ் ரூபா 675 மில்லியன் ஒதுக்கிடப்பட்டு நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் மட்டுமே உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும், 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்ட தாபனக் கட்டமைப்பு, கட்டுநிதித் தேவைப்பாட்டுத் திட்டம் மற்றும் வருடாந்த பெறுகைத் திட்டம் போன்றவை உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |

### 3.3 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் சமுர்த்தி நலன் பெறுநர்களை வலுப்படுத்துவதற்காக ரூபா 192,434,820 ஒதுக்கத்தில் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட 02 பிரதான நோக்கங்கள் மற்றும் 7,868 செயற்திட்டங்கள், ரூபா 7,326,946 ஒதுக்கத்தின் கீழ் முந்திய வருடத்தில் முன்கொண்டு வரப்பட்ட 70 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் காணப்பட்டன. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் எதுவும் செயற்படுத்தப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 23 மாவட்டங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளுக்கான 124 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 180,974,940 தொகையில் ரூபா 116,593,996 செலவு செய்யப்பட்டு அம்பாறை மாவட்டத்தின் 79 செயற்திட்டங்கள், ரூபா 8,141,859 செலவிடப்பட்டு மேலும், 11 மாவட்டங்களின் 13 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. மிகுதி 11 மாவட்டங்களுக்காக எவ்வித செயற்திட்டங்களும் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | தீவு முழுவதும் அபிவிருத்தி செய்யப் படுவதற்கான உட் கட்டமைப்புக்களை அறிமுகப்படுத்தி ஒதுக்கங்களை ஏற்படுத்தி அதன் பிரகாரம் நடக்க வேண்டியமை. | வருடத்தின் ஆரம்ப செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் அனைத்து மாவட்டங்களுக்கும் ரூபா 100 மில்லியன் ஒதுக்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) | 3 செயற்திட்டங்களுக்கான 3 செயற்பாடுகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 8,750,000 ஆன தொகை ரூபா 3,870,000 ஆல் விஞ்சப்பட்டு ரூபா 12,620,000 செலவு செய்யப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டம் திருத்தப்படும் போது குறிப்பிட்ட திருத்தங்கள் செய்யப்பட வேண்டியமை. | விடை அளிக்கப்படவில்லை. |

### 3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் வருடத்தின் செயலாற்றுகை அறிக்கையில் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வெளியிடப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றுகை அறிக்கையில் கண்ககாய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை உள்ளடக்கப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |

**3.5 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 இன் அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் உள்ளடக்கப்பட்ட வழிகாட்டிகளின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டின் முதலாவது காலாண்டிற்காக மட்டுமே பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் வருடத்தின் முழுமையான வரவு செலவுத் திட்ட ஒதுக்கத்திற்காகத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2006 இன் அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 2,300,000 ஆன ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்த சமனலவேவ பயிற்சி நிலையம் அமைந்துள்ள 2.178 ஹெக்டயர் காணித் துண்டு கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையுடன் ரூபா 132,746,000 இற்கு மதிப்பிடப்பட்ட நில்லம்பே பயிற்சி நிலையத்தின் காணி மற்றும் கட்டிடத்தைப் பொறுப்பேற்பதற்கு மற்றும் அவ்விடத்தில் அதிகாரமளிக்கப்படாத வதிவாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 525,000 ஆக மதிப்பிடப்பட்ட பெறுமதி அறவீடு செய்து காணித்துண்டைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காணிகள் மற்றும் கட்டிடங்களைக் கைப்பற்றுவதற்கு மற்றும் பொறுப்பேற்பதற்கு மான நடவடிக்கை களைத் தாமதமின்றி எடுக்க வேண்டியமை. | சமனலவேவ பயிற்சி நிலையம் அமைந்துள்ள காணித்துண்டைக் கைப்பற்றுவதற்கு பிரதேசச் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் நில்லம்பே பயிற்சி நிலையத்தின் காணி மற்றும் கட்டிடங்களை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் மற்றும் அதிகாரமளிக்கப்படாத வதிவாளரின் பணம் அறவிடப்படுவதற்கு பிரச்சினைகள் எழக்கூடும். |

## 3.7 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அரசின் பணம், வருமானம், முத்திரை மற்றும் பொருட்கள், அணிகலன்கள் என்பவற்றை ஏற்றுக் கொள்ளுதல் அல்லது பொறுப்பேற்றல் மற்றும் நிர்வாக சம்பந்தமான பொறுப்புக்களை உடைய மற்றும் அரசாங்க கணக்குகளுக்கான பொறுப்புக்கள் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பிணை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பிணை வைத்தல் செய்யப்பட்டிருக்க வில்லை. | சட்டங்களின் பிரகாரம் பிணை வைத்தலுக்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |

## 3.8 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில்கள் வழங்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களுக்கு மற்றும் மீளாய்வாண்டின் சமர்ப்பிக்கப்பட்ட 9 ஐய வினாக்களுக்கு விடைகள் அளிக்கப்படாமையுடன் தாமதகாலம் 1 மாதத்திலிருந்து வருடத்திற்கும் மேற்பட்ட காலவீச்சில் காணப்பட்டது. அவ் ஐயவினாக்களுக்குரிய கணக்கிடப்பட முடியுமான கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 10,084.42 மில்லியன் ஆகும். | நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர் இனால் நிதிப் பிரமாணம் 452(1) இல் குறிப்பிட்ட கணக்காய்வு ஐயவினா பதிவேட்டைப் பரீட்சித்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கு உடனடியாக விடைகள் அளிக்கப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |

**3.9 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தல் சம்பந்தமாக வருடாந்த திட்டம் தயாரிக்கப்பட்டிராமையுடன் மற்றும் பயிற்சி நிலைய நிர்வாகம் தலைமை அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ் செய்யப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பயிற்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு பயிற்சி நிலையம் மேற்பார்வையின் கீழ் நடாத்தப்பட வேண்டியமை. | கட்டுநிதிக் குறைபாடு காரணமாக வருடாந்தப் பயிற்சித் திட்டம் தயாரித்தல் நடைமுறைக்குப் பொருத்தமானதன்று. |
| (ஆ) | நிவாரணப் பங்களிப்பு விழா நடாத்துவதற்காக சமூகப் பாதுகாப்பு நம்பிக்கை நிதியத்தின் ரூபா 218,493,601 மற்றும் சமூக வங்கிப் பிரிவின் ரூபா 100,000,000 ஆகப் பெறப்பட்ட பணம் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வரவு செலவுத் திட்ட ஒதுக்கத்திற்குப் புறம்பாக செய்யப்பட்ட செலவுகளைத் தீர்ப்பதற்கான தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | பின்னர் விடையளிக்கப்படும். |
| (இ) | புதிய சமுர்த்தி நிவாரண விண்ணப்பங்கள் கணனிமயப்படுத்துவதற்கு மற்றும் அதற்கான கடிதங்களை திறந்து விநியோகிப்பதற்குமாக குறிப்பிட்ட அனுமதியினைப் பெறாது ஒரு விண்ணப்ப படிவத்திற்கு ரூபா 6 வீதம் நிலையான உத்தியோகத்தர்களுக்கு ரூபா 2,444,074 படிகள் வழங்கப்பட்டிருந்தன. | பொது நிர்வாக அமைச்சின் அனுமதி பெறப்பட வேண்டியமை. | கடமை நேரத்திற்கு வெளியே செய்யப்பட்ட இச்செயற்பாடுகளுக்காக சமுர்த்தி சமூக நம்பிக்கை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டது. |
| (ஈ) | 2006 இன் அரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் அறிவுறுத்தல் மற்றும் களஞ்சியசாலை நடைமுறைகளைப் பின்பற்றாமல் சமுர்த்தி அபிவிருத்தி | பெறுகை வழிகாட்டிக் கோவையின் மற்றும் நிதிப் பிரமாணங்களில் உள்ளடக்கப் பட்டுள்ள | பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றும் போது போதியளவு ஒதுக்கங்கள் காணப்படாத காரணத்தினால் இம்முறையில் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களுக்கு நியமனக் கடிதம் பங்கிடுதல் மற்றும் விழாக்கள் நடாத்துவதற்கான செலவுகள் ரூபா 14,681,351 உம் 72 டயர் கொள்வனவு செய்தமைக்காக ரூபா 2,296,464 மற்றும் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படும் போது 4 பெறுகைகள் சம்பந்தமாக ரூபா 246,283,828 செலவிடப்பட்டிருந்தது. | அறிவுறுத்தல் களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை | எடுக்கப்பட்டிருந்தது. |
| (உ) | திணைக்களத்திற்கு உரித்தான 4 வாகனங்கள் நேரடி அமைச்சிற்கு மற்றும் இன்னொரு வாகனம் வேறு அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தன. இவற்றுள் நேரடி அமைச்சிற்கு வழங்கப்பட்ட வாகனப் பராமரிப்பிற்காக ரூபா 4.4 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | திணைக்களத்திற் குரிய சொத்துக்கள் பிரகாரங்களுக்கு இணங்கியதாக நோக்கங்களை அடைந்து கொள்வதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டியமை. | பின்னர் விடை அளிக்கப்படும். |
| (ஊ) | திணைக்களத்திற்குச் சொந்தமானதென உறுதிப்படுத்தப்படாத 2 கெப் வாகனங்கள் மற்றும் 09 மோட்டார் சைக்கிள்கள் சம்பந்தமாக 2019/2020 காலப்பகுதிக்கு ரூபா 132,648 செலவிடப்பட்டுக் காப்புறுதி காப்பீடொன்று பெறப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட வாகனங்களுக்கான பாவனை சம்பந்தமாக சோதனைகள் நடாத்தப்பட வேண்டும். | பின்னர் விடை அளிக்கப்படும். |
| (எ) | 9 குழாப் வாகனங்கள் அனுமதியின்றி இரவு வேளைகளில் வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டமை, மோட்டார் கார் ஒன்று 593 கிலோ மீற்றர் தூரம் அனுமதியின்றி பயணித்தமை, பரிந்துரைகள் மற்றம் வழங்குவதற்கான கட்டளைகளின்றி 32 வாகனங்களிற்கு எரிபொருள் 4,975 லீற்றர் விநியோகிக்கப்பட்டமை போன்ற விடயங்களின் | வாகனங்கள் சம்பந்தமாக முறையான உள்ளகக் கட்டுப்பாடு ஒன்று பேணப்பட வேண்டியமை. | பின்னர் விடையளிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணத்தினால் வாகனங்கள் முறையாக உபயோகிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஏ) | மீளாய்வாண்டில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி பெறப்படாது 2017 போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட்ட 3,673 விண்ணப்பதாரிகள் மீண்டும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ரூபா 606,692 செலவிடப்பட்டிருந்தது. எனினும், குறிப்பிட்ட ஆட்சேர்ப்பு நடைபெறாமை காரணமாக அச்செலவு விளைவற்றதாக காணப்பட்டது. | முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | முன்னாள் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் அடிப்படையில் செய்யப்பட்ட இம்முறையற்ற நடைமுறை எதிர்காலத்தில் நடைபெறாமலிருப்பதற்கு உத்தரவாதமளிக்கப்படும். |
| (ஐ) | 21 மாவட்டங்களுக்கான காத்திருப்புப் பட்டியலில் உள்ளடக்கப்பட்ட 589,472 குடும்பங்களில் 135,106 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவில்லை. அதேபோன்று கம்பஹா மாவட்டத்தின் பிரதேசச் செயலக அலுவலகங்களில் காத்திருப்பு பட்டியலில் உள்ளடங்கிய 43,853 குடும்பங்களில் காத்திருப்பு ஒழுங்கில் அல்லாது தேர்ந்தெடுக்கப்பட்ட 33,398 குடும்பங்களிற்கு நிவாரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டது. | தேசிய கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நிவாரணப் பகிர்ந்தளிப்பு செய்யப்பட வேண்டியமை மற்றும் நலன் பெறுநர்களின் தகவல்கள் உள்ளடக்கியதாக தரவுகள் கோவையொன்று தயாரிக்கப்பட வேண்டியமை. | பின்னர் விடை அளிக்கப்படும். |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2030 ஆம் ஆண்டளவில் வறுமையற்ற ஒரு செழிப்புள்ள நாடாக இலங்கையை மாற்றுவதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளுக்கு இணங்கியதாக திட்டம் தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தினால் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |

## 5. நல்லாட்சி

### 5.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை முறையாக மீளாய்வு செய்யப்பட்டு குறைபாடகள் மீண்டும் ஏற்படுவதனைத் தவிர்க்கும் வகையில் தேவையான சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் செயற்பாடுகள் முறையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் செயற்பாடுகள் முறையாக நிறைவேற்றப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |

## 6. மனிதவளங்கள் முகாமைத்துவம்

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 26,430 மற்றும் 25,412 ஆக இருந்ததுடன் திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது தனிப்பட்ட சம்பளங்களுக்கான செலவுப் பிரிவின் கீழ் ரூபா 12,823.44 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது சம்பந்தமான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் 4 பதவிகள் சம்பந்தமான சேவைக் குறிப்புக்கள் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்ட முறைமைகள் மற்றும் 13 பதவிகள் சம்பந்தமாக பதவி உயர்வுத் திட்ட முறைமைகள் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகளைத் துரிதப் படுத்துவதன் மூலம் நிர்வாகப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஆ) | திணைக்களத்தின் 6 பதவிகள் சம்பந்தமாக மேலதிக பதவியணியினர் 172 ஆகும். | மேலதிகப் பதவியணியினர் பேணப்பட முடியாமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (இ) | இலங்கை நிர்வாக சேவையின் 1 ஆம் தரத்தில் மாவட்டப் பணிப்பாளர்களுக்கான 6 பதவிகள் மற்றும் கணக்காளர் 1 ஆம் தரத்திற்கான 16 பதவிகள் என்பன பதில் மற்றும் கடமைகளை ஒப்புதல் அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தன. | அனுமதிக்கப்பட்ட பதவியணி யினர்களில் முறையாக நியமனம் வழங்கப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |